BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

E - ISSN: 3139 -1893

An international open access, peer- reviewed, refereed journal

# திருக்குறள் காட்டும் பௌத்த அறம்
# Thirukkural Kattum Bhouththa Aram

**திருமதி. து. லட்சுமி**

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் முதுகலை மற்றும் உயராய்வு மையம்,

காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**Mrs. T. Lakshmi**

Full-time doctoral Researcher, Centre for Postgraduate and Advanced Studies in Tamil,

Quaid-e-Millat Government College for Women, Chennai, Tamilnadu, India.

**Abstract**

Thiruvalluvar, the celebrated author of Tirukkural, was born in Tamil Nadu, a land where art and culture flourished. He is regarded as one of the greatest scholars who brought pride to Tamil Nadu. Owing to the excellence and universal values found in the Tirukkural, numerous new commentaries and comparative studies continue to emerge across generations. The purpose of this article is to explain the greatness of the Tirukkural as a universal scripture, to examine the moral philosophies of Thiruvalluvar, and to explore the view that the Tirukkural reflects Buddhist thought.

**Key words:** Thirukkural, Buddhist ethics, Thiruvalluvar, Thirukkural and ethics

**ஆய்வுச்சுருக்கம்**

திருக்குறளின் புகழ்பெற்ற ஆசிரியரான திருவள்ளுவர், கலையும் பண்பாடும் தழைத்தோங்கிய பூமியான தமிழ்நாட்டில் பிறந்தார். தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த மாபெரும் அறிஞர்களில் ஒருவராக அவர் கருதப்படுகிறார். திருக்குறளில் காணப்படும் சிறப்பு மற்றும் உலகளாவிய விழுமியங்களின் காரணமாக, தலைமுறை தலைமுறையாக எண்ணற்ற புதிய உரைகளும் ஒப்பீட்டு ஆய்வுகளும் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன. ஒரு உலகளாவிய புனித நூலாக திருக்குறளின் மேன்மையை விளக்குவதும், திருவள்ளுவரின் அறநெறித் தத்துவங்களை ஆராய்வதும், திருக்குறள் பௌத்த சிந்தனையைப் பிரதிபலிக்கிறது என்ற கருத்தை ஆய்வு செய்வதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

**திறவுச் சொற்கள்:** திருக்குறள், பௌத்த அறம், திருவள்ளுவர், திருக்குறளும் அறமும்

**முன்னுரை**

ஆய கலைகளும் சிறந்து விளங்கிய பிறந்தார் தமிழகத்தின் பெருமையை நிலைநிறுத்திய தமிழ்நாட்டில் அனுமறை நாயகனாம் வள்ளுவர் உலகின் மிகச்சிறந்த கல்வியாளர் திருக்குறளின் நிலைநிறுத்திய சிறப்பால் காலத்தோறும் புதுப்புது விளக்க உரைகளும் ஒப்பாய்வுகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருவள்ளுவரின் பெருமையை நிலைநாட்டிய பாரதியார்.

*“வள்ளுவன் தன்னை உலகினுக்கே - தந்து*
*வான்புகழ் கொண்ட தமிழ்நாடு”*
*(பாரதியார் கவிதைகள், வாழிய செந்தமிழ்)*

என்கிறார். ஔவை மூதாட்டியோ,

*“அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி*
*குறுகத் தரித்த குறள்” (திருவள்ளுவமாலை)*

என்கிறார். உடலில் உள்ள அணுவின் சக்தியையே துளைக்கும் ஆற்றல் கொண்டது திருக்குறள் என்கிறார் உலகில் எப்போதெல்லாம் அறம் குன்றிக் காணப்படுகிறதோ, அப்போதெல்லாம் ஞானிகள் தோன்றுவார்கள் அவ்வாறு தோன்றிய மனித நேயமிக்க மாமனிதர்கள் இருவர், மகாத்மா புத்தர், வான்புகழ் திருவள்ளுவர்.

மொழியே மனித வாழ்வின் மிகப்பெரிய கருவூலம் உலகில் தோன்றிய எல்லா

மொழிகளிலும் முதன்மையானதும், மூத்த மொழியாகவும் விளங்கு வது நமது தாய் மொழியாகிய தமிழ்மொழியாகம் தமிழில் பல்வேறு இலக்கண இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே தான் இருக்கின்றது. அவற்றில் தமிழுக்குப் பெறுமை சேர்க்கும் நூல் திருக்குறள் இதில் இல்லாததும் இல்லை அவற்றில் சொல்லாததும் இல்லை. சாதி மதம், மொழி, இனம் கடந்து நிற்கும் ஒப்பற்ற நூல் திருக்குறள் அறம், பொருள், இன்பம் தேவையான அற ஒழுக்கங்களை உணர்த்தும் வேதம், என்னும் முப்பாலை உணர்த்தி மனித சமுதாயத்திற்குத் எந்த குறிப்பிட முதத்திற்கும், இனத்திற்குமாக மாறாக எல்லா மனிதற்கும் சமமான ஒரு நூலையே படைத்துள்ளார். அறம், பொருள், இன்பம் என்று திருவள்ளுவர் திருக்குறளை எழுதவில்லை அவர் முப்பாலை திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். பௌத்தத்திலும் திரிபிடகம் என்னும் மூன்று ஒழுக்கங்கள் காணப்படுகிறது. ஆய்வு நோக்கில் திருவள்ளுவரையும் புத்தரையும் இணைத்து பார்க்கும் போது இருவரும் ஒரே வகையான ஒழுக்கங்களைக் குறிப்பிட்டுள்ளனர் என்பது விளங்கும் பௌத்தத்தின் எண்வழிப்பாதையை திருவள்ளுவர் எண் குணத்தான் என்று குறிப்பிட்டிருக்கிறது எவ்வாறு பௌத்தமும் திருக்குறளும் ஒத்திருக்கிறது என்பதை விவரிப்பதை இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**பௌத்தம்**

இந்தியாவில் தோன்றிய சமயங்களும் முதன்மையானதாகும். இது அவை நீக சமயமாகும். இந்தியச் சமயங்களை, அவை தீக சமயங்கள் வை தீக என்பது வேதங்களையும், உபநிடதங்களையும், சமயங்கள் என்று வகைப்படுத்தலாம் வை தீக சமயம் சடங்குகளையும், மனுவையும் அடிப்படையாகக் கொண்டது பௌத்தம் என்ற அவை நீக சமயம் என்பது வேத ஒழுங்குமுறைகளையும் தத்துவார்த்த முடிவுகளையும் நிராகரிப்பதாகும். பௌத்தமும் சமணமும் அழைக்கப்படுகிறது. சிரமண சமயங்கள்

**சக மனிதனை மனிதனாக மதிப்பதே பௌத்தம்**

பௌத்தம் என்பது ஞானத்தைப் பெற பிற உயிர்களை வருத்தாத வாழ்க்கைமுறையில் நெறியைக் தமிழ் மொழியானது, வேங்கடம் முதல் குமரிவரை மிளிர்கிறது என்பதை வடவேங்கடம் "தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்ற சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் விசாலத்தைப் பறைசாற்றுகின்றன. இமயம் வரை சென்று தன் தமிழ்நாட்டின் பெருமையை நிலை நிறுத்தியவன் சேரன் செங்குட்டுவன் அத்தகைய சிறப்பு வாய்ந்த கன்னித் தமிழில் காலந்தோறும் புதுப்புது, இலக்கண இலக்கியங்கள் தோன்றிய வண்ணமே உள்ளது. அவை எல்லாவற்றிலும் சிறந்து விளங்குவது திருக்குறளே. அதில் இல்லாததும், இல்லை, அவற்றில் சொல்லாததும் இல்லை என்னும் அளவிற்கு திகழும் ஓர் ஒப்புயர்வற்ற நூல் திருக்குறள்.

தமிழினத்தை உலக அரங்கில் உயர்த்திய ஒப்பற்ற வேதம் திருக்குறள் .18,19-ஆம் நூற்றாண்டு களில் உலகெங்கும் எழுந்த பல்வேறு அறிவியல், சமூக, சமயம், அரசியல் மறுமலர்ச்சிகளால் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. கடவுளை மையப்படுத்தியே இயங்கிய சமூக, சமய வாழ்வை மாற்றி மனிதனை மையப்படுத்த ஆயத்தமான காலம்.

கடைப்பிடிப்பதாகும். அதோடு மட்டுமல்லாமல் தன்னை தூய்மைப்படுத்திக் கொண்டு முயற்சியோடும் சிரமத்தோடும் தீவிரப் பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்ற காரணத்தையும் பௌத்தம் கூறுகின்றது இதையே வள்ளுவரும் ஆமை போல ஐந்து அடக்கம் என்கிறார் மெய் வாய் மூக்கு செவி கண் என்னும் ஐந்து புலன்கைளயம் கட்டுப்படுத்தி பூரண மெய்ஞானம் பெறும் வழியை அமைத்து தந்தவர்கள் புத்தரும் திருவள்ளுவரும்.

**திருக்குறளும் கன்னித்தமிழும்**

தமிழ் மொழியாளது, வேங்கடம் முதல் குமரிவரை மீளிர்கிறது என்பதை வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்ற சங்க இலக்கியங்கள் தமிழ் மொழியின் விசாலத்தைப் பறைசாற்றுகின்றன இமயம் வரை சென்று தன் தமிழ்நாட்டின் பெருமையை நிலை நிறுத்தியவன் சேரன் செங்குட்டுவன் அத்தகைய சிறப்பு வாய்ந்த கன்னித் தமிழில் காலந்தோறும்

புதுப்புது இலக்கண இலக்கியங்கள் தோன்றிய வண்ணமே உள்ளது அவை எல்லாவற்றிலும் சிறந்து விளங்குவது திருக்குறனே. அதில் இல்லாததும் இல்லை அவற்றில் சொல்லாததும் இல்லை என்னும் அளவிற்கு திகழும் ஓர் ஒப்புயர்வற்ற நூல் திருக்குறள்.

தமிழினத்தை உலக அரங்கில் உயர்த்திய ஒப்பற்ற வேதம் திருக்குறள்: 18,19-ஆம் நூற்றாண்டு களில் உலகெங்கும் எழுந்த பல்வேறு அறிவியல் சமூக சமயம், அரசியல் மறுமலர்ச்சிகளால் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன கடவுளை மையப்படுத்தியே இயங்கிய சமூக, சமய வாழ்வை மாற்றி மனிதனை மையப்படுத்த ஆயத்தமான காலம்.

**திருக்குறளும் அறமும்**

திருவள்ளுவர் அறத்தின் மீது ஆழமான நம்பிக்கைக் கொண்டவர் மறந்தும் பிறருக்குத் துன்பமானவற்றை மனதில் நினைக்கவே கூடாது என்றவர். அவ்வாறு எண்ணினால் எண்ணியவனுக்கே அந்தக் கெடுதல் நிகழும் என்கிறார்.

*"மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
*அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு"(குறள்.204)*

பெற்ற தாயின் பசியை காண நேர்ந்தாலும் சரி., அதைப் போக்குவதற்காகவும் சான்றோர் பழிக்கும் தீய செயல்களைச் செய்யக்கூடாது என்கிறார். பிறர்க்கு உதவியாக ஈதல் என்பது நல்ல பண்பாகும். அந்த மேலுலகம் இன்பம் மறுக்கப்பட்டாலும் ஈதலே நல்ல அறம் என்கிறார்.

உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டு வாழ்வதே மனிதனின் மிகப்பெரிய அறமாகும் அறநெறியைப் பின்பற்றி வாழும் போது அந்த அற வாழ்வுக்கு இடையூறு ஏற்படும் என்றால் அந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்பனான புத்தர் வீற்றிருக்கும் புத்த பிரானின் திருவடிகளை வணங்க அவரின் போதனைகளையும் பின்பற்றி வாழ்கின்றவர் உலகில் சிறந்து விளங்குவார்.

எண் வழிப் பாதையை வகுத்த புத்த பிரானின் கொள்கை வள்ளுவத்திலும் எதிரொலிக்கிறது. அட்டங்க சீலம் என்னும் எண் வழி மார்க்கத்தை கடைப்பிடித்து வாழ்பவர் உலகில் ஒப்புயர்வற்ற நிலையை அடைவர். தாளை வணங்காத் தலை, தீயவற்றை கேளாமலும், பார்க்காமலும் பேசாமல் இருக்கின்ற இறைவனை வணங்காத தலைகள் பயனற்றவை.

வள்ளுவர் கடவுள், இறைவன் என்று குறிப்பிடும் போது இந்த சொற்களும் திருக்குறளில் பல்வேறு இடங்களில் பௌத்தம் தொடர்பான, அறம், பீடிகை, அந்தணன், ஒழுக்கம், இன்னா செய்யாமை வாய்மை, பிறன்மனை நோக்காமை போன்ற போன்ற செற்களைப் செற்களைப் பார்க்கின்ற போது திருவள்ளுவர் புத்தரையே, கடவுள் என்ற சொல்லால் அழைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இடையூறுகளை ஏற்றுக்கொள்வதே நல்லது என்று கூறுகிறார் பொய்யாமொழிப்புலவர். பிறர் இல்லாத நேரத்தில் அவரைப் பழித்துப் பேசிப் பொய்நெறியில் வாழ்வதைக் காட்டிலும் வாழாமல் மடிவதே மேலானது என்கிறார்.

**திருக்குறளில் பௌத்தம்**

கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கௌதம புத்தரால் வடஇந்தியாவில் தோன்றியது பௌத்தம் அதே கி.மு.வில் தோன்றியது திருக்குறள், திருக்குறளின் காலம் அறுதியிட்டுக்கூற முடியவில்லை இவர்கி.மு வில் பிறந்தவர் என்றும், கி. பி. இல் பிறத்தவர் என்று பல கருத்துகள் நிலவுகின்றன.

பௌத்தம் மனிதனிடம் உள்ள ஏற்றத்தாழ்வு களை மறுத்து அன்புடைமையை வலியுறுத்துகின்றது. இது வேதமதத்தின் நால்வர்ண முறைக்கு எதிராக சமத்துவத்தை வலியுறுத்தும் சீர்த்திருந்த மதமாகும். திருவள்ளுவரும் புத்தரின் சீர்திருத்தக் கருத்தை நேரடியாகக் கூறுகின்றார். அதனை,

*"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான்"(குறள். 972)*

மனிதர்கள் அனைவரும் பிறர்ப்பால் சமமானவர்களே அவர்கள் செய்யும் தொழிலின் அடிப்படையிலேயே வேறுபடுகிறார்கள். (Tamil Fuser - துணைநூல் (திருக்குறளும் பௌத்தமும்). புலால் உண்ணும், பழக்கம் மக்களிடை இருந்த போது, அதனை மறுத்த உயிர்க் கொல்லாமையை

வலியுறுத்தியவர் திருவள்ளுவர். இதனையே பௌத்தமும் பஞ்சசீலக் கொள்கையான 'கொல்லாமை' என்னும் அறமாகக் கொண்டுள்ளது.

*“அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத்து உண்ணாமை நன்று”(குறள். 259)*

முதல் இயலான கடவுள் வாழ்த்தில் "அறவழி அந்தணன் தாள் என்ற சொல் இறைவனின் திருவடியைக் குறிக்கிறது. ஆழி என்னும் சொல் கடல் என்னும் பொருளில் அமைகின்றது. அறம் என்ற கடலைக் கைக் கொண்டவர்க்கு பிறவி என்னும் கடலைக் கடப்பது எளிதாகும். அறக் கடலாக விளங்கும் புத்தபிராவின் அறவுரைகளை பின்பற்றி வாழ்பவர் துன்பமெனும் பிடியிலிருந்து விலகியிருப்பார்.

*"அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் அல்லால்*
*பிறஆழி நீந்தல் அரிது"(குறள்.8)*

**பௌத்தநெறியும் திருக்குறளும் - அடித்தட்டு மக்களின் அறிவாயுதம்**

நான்கு உன்னத வாய்மைகள் புத்தர் கண்ட நான்கு உண்மைகள் துன்பம். 2 ஆசை. 3 துன்பம் நீக்கம் 4. எட்டு நெறிகள்.பிறப்பு:, நோய், முதுமை. இறப்பு மற்றும் பசி மனிதர்களால் தவிர்க்க இயலாத துன்பங்கள், மேலும் பகை,கொலை, வெருளி, இழப்பு, இவற்றை விட்டொழியுங்கள் என்கிறார் புத்தர் அதனைப் போன்றே திருவள்ளுவரும், பொறாமை, ஆசை, சினம் கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களையும், விட்டொழிங்கள் என்கிறார்.இதனை,

*“அழுக்காறு அவாவெகுளி இன்னாச் சொல் நான்கும்*
*இழுக்கா இயன்றது அறம்”(குறள். 35)*

தடுவு நிலைமை, அடக்கம் உடைமை ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை பொறை, உடைமை, அழுக்காறாமை என்னும் இயல்களிலும் பௌத்தம் வலியறுத்திக் கூறப்படுகிறது. தீவினை அச்சம் என்னும் 21-அதிகாரத்தில் மறந்தும், பிறர்க்கு தீமை செய்யாதே என்கிறார். திருவள்ளுவர். இதனையே பௌத்த அறமும் எண்வகை மார்க்கத்தில் விளக்கிக் கூறுகிறது பௌத்தம்.

*“மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்”(குறள்.3)*

தாமரை மலரில் வீற்றிருக்கும் அன்பனான புத்தர் வீற்றிருக்கும் புத்த பிரானின் திருவடிகளை வணங்க அவரின் போதனைகளையும் பின்பற்றி வாழ்கின்றவர் உலகில் சிறந்து விளங்குவார். எண் வழிப் பாதையை வகுத்த புத்த பிரானின் கொள்கை வள்ளுவத்திலும் எதிரொலிக்கிறது. & அட்டங்க சீலம் என்னும் எண் வழி மார்க்கத்தை கடைப்பிடித்து வாழ்பவர் உலகில் ஒப்புயர்வற்ற நிலையை அடைவர். இதனை,

*“கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
தாளை வணங்காத் தலை”(குறள்.9)

தீயவற்றை கேளாமலும், பார்க்காமலும் பேசாமல் இருக்கின்ற இறைவனை வணங்காத தலைகள் பயனற்றவை.

வள்ளுவர் கடவுள், இறைவன் என்று குறிப்பிடும் போது இந்த சொற்களும் திருக்குறளில் பல்வேறு இடங்களில் பௌத்தம் தொடர்பான. அறம், பீடிகை. அந்தணன். ஒழுக்கம், இன்னா செய்யாமை வாய்மை, பிறன்மனை நோக்காமை போன்ற செற்களைப் பார்க்கின்ற போது திருவள்ளுவர் புத்தரையே, கடவுள் என்ற சொல்லால் அழைத்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

**திருக்குறளில் தம்மம்**

இல்லறவியல் அதிகாரம் 14வது,

1. ஒழுக்கம் என்பது தான் ஒரு மனிதனுக்கு மேண்மையைத் தருவது அது உயிரை விட மேலானது.
2. ஒருவர் இருந்தாலும் ஒழுக்கத்தை கடைபிடிக்க வேண்டும் அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணை நிற்கும்.
3. வருத்தமாக இருந்தாலும் வறுமையில் ஒருவன் ஒழுக்கமுடையவளாய் வாழ்வதே உயர்ந்த குடியில் பிறந்ததற்கு ஒப்பாகும். ஒழுக்கம் தவறினால் இழிகுலத்தில் பிறந்தவன் ஆவான்.
4. வேதம் படிக்கின்ற அந்தணன் (பார்ப்பான்) அதனை மறந்தாலும் சுற்றுக்

கொள்ளலாம் ஆனால் அவன் ஒழுக்கம் தவறினால் அவன் குடிப்பெறுமை கெடும்.

5. உலகத்தையே வெல்ல நினைக்கும் ஓர் அரசன் அதைப் பற்றி எண்ணிக்கலங்காமல் அதற்கு ஏற்றக் காலத்தைக் கருதிக் கொண்டு பொறுத்திருப்பார்.
6. ஊக்கம் மிகுந்தவன் (காலத்தை எதிர்பார்த்து) அடங்கியிருத்தல், போர் செய்யும் ஆட்டுக்கடா தன் பகையைத் தாங்குவதற்காகப் பின்னே கால் வாங்குதலைப் போன்றது.
7. அறிவுடையவர் (அரசர்) (ஒருவர் தனக்கு தீங்கு) தனக்கு ஒருவர் தீங்கு செய்த உடன் பதிலுக்கு தீமை செய்யமாட்டார்.
8. மனதில் சினத்தை அடக்கிக் கொண்டு, தந்திரமாக செயல்பட்டு போரில் வெற்றி கொள்வார்.
9. அரசர் தன் பகைவரைக் கண்டால் பொருத்துக்கொள்ள வேண்டும். உரிய காலம் வரும் போது அவரின் தலை கீழே விழும்.
10. ஒரு செயலை செய்வதற்கு ஏற்ற காலம் வருமாயின் அதனைப் பயன்படுத்திக் கொண்டு சிறந்த செயல்களைச் செய்ய வேண்டும்.
11. காலம் வரும் வரை காத்திருக்கும் கொக்கு (ஒரு மீன் ஓட) ஔவையார் கூறுகின்றார். அதுபோல மனிதன் காலம் வரும் வரை காத்திருந்து பொருமையாக தன்னுடைய செயலை செய்யவேண்டும்.

இவ்வாறு திருக்குறளில் பௌத்த தம்மம் பெரிதும் பேசப்படுகிறது.

**புறங்கூறாமையும் பௌத்தமும்**

அதிகாரம்-19, ஒருவர் அறத்தை போற்றிக் காக்கவில்லை என்றாலும் கூட, மற்றவர்களைப் பற்றி புறம் போக் கூடாது என்கிறது பௌத்தம். இதனை,

*“அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்*
*புறம்கூறான் என்றல் இனிது” (குறள். 181)*

அறத்தை அழித்துப் பேசி அறமல்லாத ஒன்றைச் செய்வதை விட ஒருவன் இல்லாத இடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பார்க்கும் போது பொய்யாக முகமலர்ந்து பேசிப் பழகுவது தீமையானதாகும்.

*“அறன்அழீஇ அல்லவை செய்தலின் தீதே*
*புறன்அழீஇப் பொய்த்து நகை” (குறள்.182)*

புத்தரின் பஞ்சசீலக் கொள்கைகளுள் ஒன்றான பொய்பேசாமல் இருப்பது என்பது மிகப்பெரிய அறமாகக் கருதப்படுகிறது. இதனை 183வது குறளில் வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர்.

*“புறம்கூறிப் பொய்த்துஉயிர் வாழ்தலின் சாதல்*
*அறம்கூறும் ஆக்கம் தரும்”(குறள்.183)*

பொய் பேசி ஒருவன் உயிர் வாழ்தலைவிட இறப்பதே மேல் என்கிறார் வள்ளுவர். அறத்தை நல்லது என்று நினைப்பவளை புறம் கூறவதற்கு சமம் என்கிறார். இதனை,

*“அறம்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறம்சொல்லும்*
*புன்மையால் காணப் படும்”(குறள். 185)*

அறம் என்பதே வாழ்வின் மிகப்பெரிய கருவூலம் என்று புத்தரும் திருவள்ளுவரும் குறிப்பிடுகின்றனர். இறைவனை வணங்குவதை விடவும், ஆலயங்கள் பலவற்றிற்கு செல்வதை காட்டிலும் பிறருக்கு தீமை செய்யாமல் இருப்பதே மிகப்பெரிய அறமாகும். அறத்தோடு வாழ்கின்ற மனிதன் கடவுளுக்கு ஒப்பானவன் என்பதை வள்ளுவரும் புத்தரும் உலகிற்கு உணர்த்தியுள்ளனர்.

**முடிவுரை**

"திருக்குறள் உலகப் பொதுமறையாக எல்லா நாடுகளிலும், எல்லா மொழிகளிலும் பயிலப்பட்டு வருகின்றது. 1330 குறட்பாக்களில் அண்டத்தையே அளந்தவர் வள்ளுவர் என்னும் பொய்யாமெழிப் புலவர் 133 - அதிகாரங்களில் அறம் என்னும் சொல்லும், தம்மம், ஒழுக்கம் எண் குணத்தான், நான்கு வாய்மைகள், புலனடக்கம் பீடிகை என்று பல்வேறு வகையான பௌத்த சொற்கள் திருக்குறளில் காணப்படுகிறது. திருக்குறளையும் பௌத்தத்தையும் விளக்க மேலும் ஆழமான தேடலும் விரிவான ஆய்வுகளின் மூலமும், திருக்குறள் காட்டும் பௌத்த நெறிகளை

விளக்க முடியும். இரண்டடியால் மனித குலத்திற்குத் தேவை. யான அனைத்து அறத்தையும் கூறும் நூல் திருக்குறன் இந்தாலின் அனைத்தும் பௌத்த சார்ந்த தம்ம பதத்தை விளக்குவதாக அமைகின்றது.

**துணை நூற்பட்டியல்**


1. கிருஷ்ணன், ஓ.ரா.ந., பௌத்தமும் திருக்குறளும், மெத்தா பதிப்பகம். சென்னை, 2019
2. கீர்த்தி,எம்.ஏ(தொகுப்பு), பாரதியார் கவிதைகள், அருணா பப்ளிகேஷன், சென்னை, 2020
3. கௌதம நீலாம்பரன், புத்தபிரான், கவிதா பப்ளிகேஷன். பாண்டி பஜார், தி.நகர், சென்னை,1970
4. மயிலை சீனிவேங்கடசாமி, பௌத்தமும் தமிழும், கழக வெளீயீடு, திருநெல்வேலி, 1950
5. முனைவர் பெ. விஜயகுமார்(பதிப்பாளர்), திரிக்குறள் -திருக்குறள் விளக்கஉரை. க அயோத்திதாசப் பண்டிதர் தொகுப்பு, மெத்தா பதிப்பகம், அண்ணா நகர், மேற்கு, சென்னை, 2015
6. வரதராசனார், டாக்டர் மு., திருக்குறன் தெளிவுரை, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், ஆழ்வார்பேட்டை, சென்னை,1949